2962 Tamil

உ

வந்தேமாதரம்.

பாரதமாதா துணை

1606 செந்தமிழ்

# தேசிய கீதங்கள்



தஞ்சை முத்தமிழ்வித்வான்

V.S. பாப்புதாஸரவர்கள்

மாணவன் T.K. துரைராஜன்

இயற்றியது

[தனி விலை] 1931 [அணா 1]

NATIONAL ARCHIVES LIBRARY
No 2962
Date 7-3-72
GOVT. OF INDIA

உ

வந்தேமாதரம்

பாரதமாதா ஆணை

# செந்தமிழ்

# தேசிய கீதங்கள்.

---

## விநாயகர் துதி, வெண்பா

சீர்மேவும் பார்மீது தேசியக்கீதம்பாட
நேர்மேவும் விக்கினத்தைநீக்கியருள்-கார்மேவும்
அத்திமுக வைங்கரனே அரனார் தம்புத்திரனே
சித்திபெறக் கண்பார்த்தினம்

## உனது பாதம் புயமலாது என்றமெட்டு

இராகம் சங்கராபரணம் — தாளம் ரூபகம்

பல்லவி

சுகுண காந்தி இலங்கும்சாந்தி
சோபித சுபகர ஜெயத்திரு (சு)

மகுடங்கள்

சுகானந்த மதுரிததுங்க
மகானந்தம் தரும் ப்ரசங்க
சுகபாரதி மகிழும் பாலன்
ஜெயமாந்தர்கள் புகழும் சீலன்

சுயராஜ்ஜிய வரதமூர்த்தி
நயமாட்சிமை மிகுந்த கீர்த்தி
சுட்டொழி திகழ்வதனநேசி
திடவயிராக்கியமிகும் சுதேசி
சுத்த தத்துவ தவசன்னியாசி
முத்தர் நித்தம் துதிப்பிரகாசி

அனுபல்லவி

ககனமெண்டிசையுங் கமழ் மலர்பாதன்
காக்ஷிகொடுத்திடும் காருண்ய போதன் (சு)

சரணம்

சாத்மீக மென்பதை கைகொண்டயோகி
சாஸ்திரம் முற்றமே தான்கற்றயூகி
தோத்திரம் செய்துரை ராஜன் சொல் தியாகி
தொண்டர்கள் கொண்டாட நின்ற விவேகி (சு)

## இந்துதேச வங்கதேச என்றமெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்

ரவீரமேவு மூன்று சிங்கத்தை மடித்தனர்
க்கரத்தொண்டர் மோசமென்று சித்தமே துடித்தனர்
பாரதப்புவி கலங்க பாதகர் விடுத்தனர்
பாடுபட்ட காந்தி மனம் பதரி கண்ணீர்வடித்தனர்

பார்தனிலெங்கும் புகழ்
பரவிய தங்கம் சுக
சீர்மிகுந்துங்கம் இந்து
தேசத்தின் சிங்கம்

தேகமும் நடுங்கிடவே
தீரமும் ஒடுங்கிடவே தீ

தொகையறா

ஆயிரத்தொளாயிரத்திருபத்தெட்டாமாண்டு
அக்டோபர் முப்பதாம்தேதியன்று
அனியாயமாய் லஜபதி போலீஸ் தடியடிபட்
டதனால் உயிர்துறந்தாரென்றறிந்தே
தேயத்திற்கே உடல் பொருள் ஆவிமூன்றையும் தா
ரடங்கொண்ட தீர பகத்சிங்கின்
தேகமது துடிக்க ஆத்திரம் பொங்கிய சட்டசபைமீது
திரமோடு வெடிகுண்டெறிந்தார் அந்த
தூயகுண சுதேச பக்தரை அரசாங்கத்தார்
துரிதத்தில் கைதிசெய்து
ஞாயமறவே ஜன்மவரை தீவாந்திர சிட்சை யென
சொன்னார் அதன்பின்பு
ஞாயமற்ற சூப்ரண்டை நம் ராஜகுரு பகத்சிங்
சுகதேவர் இவர்கள் கொன்றதாக குற்றஞ்சாட்டி
நவிலும் முப்பத்தோராமாண்டு மார்ச் இருபத்திமூன்றில்
லாகூர் சிறையில் மாலை ஏழரைமணிக்கு

பாட்டு

நாட்டுளோர் மனம் பதர
கேட்டபேர் திணங்கதர (ஜீ)

தொகையறா

பத்துமாதம் சுமந்துபெற்ற தாயிடத்தில்
பாலகரின் பிரேதமதனைக்கொடாது

சுத்தமிகும் சட்லஜ் நதிக்கரையோரம்
சுட்டெறிக்கச்சொன்னதெந்த சட்டமோ

சத்தியம் தவராத இந்தியரை யடக்கியாளும்
சர்க்காருக்கிதுதான் தகுமுறையோ

உத்தம கோவலனால் பாண்டியன் அரசிழந்து
உயிர்துறந்ததிவ்வுலகத்தோர் அறியாரோ

பாட்டு

ஓதும் துரைராஜன்: தமிழ்
மாது பாரதத்தாய் மகிழ [ஜீ

## வாசம் கமகமென என்ற மெட்டு

இராகம் தேசிகம் தாளம் ஆதி

கண்ணிகள்

மண்டலமீதிலெங்கும் கண்டபேர்கள் வணங்கும்
மாசிலாத பத்தரை மாற்றுத்தங்கம் தொண்டு
பூசிக்கும் சித்த வைராக்கிய சிங்கம்—ஏழை

மக்களடைந்திடும் துக்கமகற்றிட
தக்க வழியுடன் மிக்கவனுதினம்

மந்திரமோதிய மகாத்மாகாந்தி அதி
சுந்தரமேவிய நற்புகழேந்தி (மண்டல

நாடுஜெயமடைய பாடுபடவுதித்த
நாதனும் காந்திசொல்லை விடலாமா இன்னும்
பாதகர் செய்யுமல்லை தொடலாமா அந்த

நஞ்சினுமே கொடிய வஞ்சகர் செய்திடும்
சஞ்சலமாய் கையில் பஞ்சுபோல் சிக்கி

நாமெல்லாம் பட்டதுன்பம் போதாதா விட்டு
மீளவே கதருடுத்தலாகாதா (மண்டல

சமரசவெற்றிதனை விமரிசையுடன்பெற்ற
சாத்மீகசீலருன சன்யாசியாம் ராட்டால்
சூத்திரம் நூர்க்க செய்த கண்காக்ஷியாம்-சுத்த

தத்துவமிருந்த உத்தமரிவரை
சித்தத்தில் துதி செய்யவினையகலும்

சன்மார்க்கதோர்புகழும் தவயோகி கெட்ட
துன்மார்க்கத்தோ ரஞ்சிடும் அதியூகி (மண்ட

செந்தமிழ் சங்கீதமும் சந்தமொடு ததும்பும்
க்ஷேத்திரம் தஞ்சைமாநகரில் வாசன்—வித்வ
கோத்திரம் தீனோர்குல கவிராஜன் அன்பர்

சித்தமகிழ்ந்திடும் முத்தமிழ்நேசன்
வித்தகர் மெச்சிடும் வி. எஸ். பீ. தாஸன்

சீசனும் துரைராஜன் தமிழ்க்கீதம் இந்து
தேசத்தோரறிவீர்கள் சுகபோதம் [மண்டல

# பண்டிதமோதிலால் நேரு என்ற

மெட்டு

இராகம் தேசிகதோடி தாளம்-ஏகம்

பல்லவி

தேசபக்தருன மூன்று சிங்கத்தை மடித்தார்
சிங்கத்தை மடித்தார் துயர்
பொங்கிட விடுத்தார் [தே]

அநுபல்லவி

ஊசினி மக்கள் துடிக்க கர்ச்சித்துக் கண்ணீர்வடிக்க
பாசமுற்ற நமதுதொண்டர் பரதவித்திடவே
பரதவித்திடவே நெஞ்சம்
பதை பதைத்திடவே [தே]

பெற்றோர் மனம்பதர பேறுலகோர்க்கதர
கற்றோர்மிக துடித்து கவலைகொண்டிடவே
கவலைகொண்டிடவே கண்
கலங்கி நின்றிடவே [தே]

தொகையரு

ஜெயமுற்ற பாஞ்சால தேசசிங்கம் லாலாலஜபதியின்
தேகமது குன்றிடவே
தயவற்றபாழும் போலீஸார் தடிகைகொண்டடித்த
தினுல் தானிறந்தாரென்றறிந்தே

டயமற்ற நெஞ்சமதை படைத்திட்டநம் பகத்சிங்
மனமிக்க பதரிடவே
நயமற்ற சட்டசபமீது வெடிகுண்டுவிட்டாரக்
குறறமதை முன்னிட்டே

பாட்டு

ஜென்மவரை தீவாந்திர சிட்சை விதித்தே கொடும்
தன்மையோடன்று சிறைதனிலடைத்தனரே
தனிலடைத்தனரே—பெறும்
சதிதொடுத்தனரே [தே)
சாந்தமிகுந்த ஞான சத்திய சீலருன
காந்திமிக துடித்து கலக்கமுற்றிடவே
கலக்க முற்றிடவே அயர்
கருத்தில் பற்றிடவே (தே

தொகையறு

தேசத்திற்கே தங்களுயிரை த்யாகம் செய்திட
திடங்கொண்ட தீரரிவர்கள்மீது
மோசமே குடிகொள்ளும் மூர்க்க போலீஸ்
அதிகாரியவரை கொன்றதாக குற்றஞ்சாட்டி
நம் ராஜகுரு பகத்சிங் சுகதேவர் இவர் முவரையும்
ஞாயமற்றகொடும் ராக்ஷதர்கள்
மாசற்ற காந்தி மகானுரைத்தமொழி அதனையும்
மறுத்து மன்னர்களை தூக்கிலிட்டார்.

பாட்டு

சாக்ஷி இல்லாது குற்றம் சாட்டினதென்ன சட்டம்
ஸாக்ஷியிருக்கும் மன்னர்கள் ஆட்சிக்கு முறையோ
ஆட்க்ஷிக்கு முறையோ அர
சாக்ஷிக்கு சரியோ [தேச

வஞ்சமிகு மனத்தினர்கள் மதியற்ற குணத்தினர்கள்
தஞ்சைதுரைராஜன் தமிழ் தாரணிபுகழும்
தாரணிபுகழும் மாது
பாரதிமகிழும் (தே

## பார்தனிலே புகழ் என்றமெட்டு,

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்
பல்லவி

சீரமிகுந்திடும் பாரதி சேயர்களே இந்து
தேச நேயர்களே [சீ]

அனுபல்லவி

போரில் ஜெயம்பெறும் வீரராய் பிறந்தும்
பாரில் மனம் நொந்து பரதவிப்பதேன் [சீ]

தொகையறு

இத்தனைநாள் அடிமைபட்டு இருந்ததுவும்
போதாதா இனியாகிலும்
சித்தரெனும் காந்திமகான் செப்புமொழிதனை
யுணர்ந்து ஜெயமளிக்கும்
சுத்தக்கதருடைதரித்து சுகம்பெறலாம்
மென்மேலும் சோர்ந்தோமானல்
மெத்த துயரடையச்செய்வார் மேல்நாட்டு
நிருதர்கள் மேதினியில் நம்மை

பாட்டு

வஞ்சகர் செய்திடும் சஞ்சலம் கொஞ்சமல்ல அதை
மதித்தும்ம சொல்ல
தஞ்சை துரைராஜன் செஞ்சொல்லறிவீர்கள்
பஞ்சமாபாதகர் துணிவிடுவீர்கள் [ கீ

# 11

# கைத்தொழிலும் வர்த்தகமும்

என்ற மெட்டு

கண்ணிகள்

தாய்நாட்டின் சிறப்பிழந்து தவித்துநிற்கும் மாந்தர்களே
ஆயகுண காந்திமொழி சுகமுடனே கைகொள்வீர்

துரிதத்தில் சுயராக்ஷியம் நாம்பெறலாம்.
பரிதாபநிலமையெல்லாம் அறவிடலாம் தா

காலமெல்லாம் மதியில்லாமல் கவர்மெண்டுக்கு நாம் உழைத்தால்
ஏழையான நமதுநாடு ஈடேறுவதெக்காலம்

இன்னுமுத்யோகம்விட மனம்வல்லையா
ஈசனவர் தந்தறிவு நமக்கில்லையா [தா

முன்னாளில் பாண்டவர்க்கு முகுந்தனவர் துணைபுரிந்தார்
இன்னாளில் இந்தியர்க்கு இனியகாந்தி துணைபுரிவார்

எப்போதும் ஒற்றுமையாய் இருக்கவேண்டும்
தப்பான மதுபானத்தை வெறுக்கவேண்டும்

தேசம்நலம்பெறவே தீரர்சிலர் உயிர்துறந்தார்
பாசமில்லாத ஜென்மம் பாரிலிருந்தென்ன பலன்

பஞ்சுபோல்பட்ட துன்பம் போதாதா
மிஞ்சுநயக்கதருடுத்தலாகாதா [தா

நிறுதருக்கடிமைபட்டு நெஞ்சமது மிகதுடித்து
கறுதலைப்போல் திரிந்த தன்மையெல்லாம் விட்டொழித்து

தஞ்சை துரைராஜன் தமிழ்தனைபடிப்பீர்
அஞ்சாமல் சுதந்தரத்தின் கொடிபிடிப்பீர் [தார்

## துவாத் சாந்த என்ற மெட்டு.

இராகம் தேசிகம் தாளம் ஏகம்

பல்லவி

மதுவிலக்கிட மனதிலோதியமாமுனி ஞானகாந்தி ம

அனுபல்லவி

பதிதனில் கொடும் பஞ்சமாபாதகம்
அதிலொன்றாகி நம் மதிமயக்கிடும் [ம

தொகையறு

பண்டுள்ள சித்தரெல்லாம்தாமே நற்பதவிபெறபாடுபட்டார்
எண்டிசைபுகழும்காந்தி இந்தியர்கள் சுகம்பெறவே பீடு
பட்டார்

சரணம்

பாரதவர் மகிழும் மாயவதாரன்
வாழ்ந்திடும் பாரதத்தாயின்குமாரன்
பூதலமீதுள்ளோர் போற்றுங் கெம்பீரன்
பொறுமையோடு போர்தொடுத்தவீரன் [மகா]

தொகையறா

ஈழ்ந்த தாய்நாட்டை சீர்திருத்தவே ஜென்ம
மெடுத்தசீமான்
சிறையே தவச்சாலை எனசித்தமகிழ்ச்சியோடு
சென்ற பூமான்

சரணத்தொடர்

பஞ்சலெக்ஷணமே கொஞ்சிடுந் தங்கம்
பாவிபகைவற்கே அஞ்சிடா சிங்கம்
தஞ்சை துரைராஜன் செந்தமிழ்பொங்கும்
சான்றாண்மை கொண்டுமே தாரணிஎங்கும் மகா

பவனகிரி அதனிலுறை என்றமெட்டு

பல்லவி

கருணைமிகும் அருமைகுண கனவானும் காந்திமகான்
கனவானும் காந்திமகான்

அநுபல்லவி

காக்ஷியாம் சுயராஜ்யம்பெற
மாக்ஷிமைத்திருமந்திரமோதிய கண்

சரணம்

திரமாய் முயற்சிகொண்டு தேசந்தனக்கேதொண்டு
புரிய உபதேசித்த புகழேந்தி ஜெகத்சாந்தி
போத சற்குணசீலனும்
மாதுபாரத பாலனும் கண்

அஞ்சாமல் சிறைபுகுந்தார் அதனுள் தவம்புரிந்தார்
தஞ்சை துரைராஜன் தமிழ்தங்குமங்களம்பொங்குமற்புத
சாந்தநிறை லோலனும்
மாந்தருக்கனுகூலனும் [க

# கைராட்டினமாம் என்ற மெட்டு

இராகம் புன்னாகவராளி தாளம் ஏகம்

பல்லவி

சுயராஜ்ஜியமாம் சொந்த சுயராஜ்ஜியமாம் நம்
தூயமகான்சொன்ன சுயராஜ்ஜியமாம் [சுய

மகுடங்கள்

சுத்தமிகுந்திடும் உத்தமகாந்தி
சித்தமகிழ்ந்திட கத்தருடித்திடில் (சுய

ஆங்கம் பொங்கவே எங்கினுமிந்தியர்
மங்களமுற்றிட சங்கடமகற்றிடும் [சு)
சுகந்தருங்கை ருட்டதை சுற்றி
அகந்தனில் நா லதனை நாற்றுல் சு

அநுபல்லவி

அயல்நாட்டார் ஆடைகளை
அகற்றவரும் நல்ல சுய

தொகையரு

அருமையிகும் காந்திமொழியதைபுணர்ந்து
அனைவர்களும்
பெருமைதருக்கதரணிந்து புகழுடனே பேசுங்க
வருமையற்ற வாழ்வுதனை வகையோடு வாங்கிடவே
பொருமை எனும் சாந்தப்போர் புரிந்தே நாம்
ஜெயம்பெறலாம்

பாட்டு

தொண்டனும் துரைராஜன் செந்தமிழ்
கண்டித்தாரணியோர் புகழ்ந்திடும் சுய

## முருகனே கலியுகத்தில் என்ற மெட்டு

பல்லவி

காந்தியே கலியுகமதில் காருண்ய புமான் மகாத்மா
[காந்தி)

அநுபல்லவி

சாந்தியே ஜெகமுழுவதும்
மாந்தர்கொண்டாட மகிமை தங்கிடும் (கா)

சரணம்

கார்மேகவண்ணனைபோலவதாரன்
பாரதமக்களுக்கே உபகாரன்
கர்த்தன் பரிசுத்தன் என பக்தன்
துரைராஜன்போற்றும். [காந்தி]

# சத்தியமென்றுமேதளரு என்றமெட்டு

கண்ணிகள்

செந்நெல் விளைந்தோங்கும் இந்தியாநாடு இதன்
சிறப்பை தினம் புகழ்ந்துபாடு வேறு
எந்நகரும் எதிதற்குயீடு இல்லை
என்றடிமை நீங்கவழிதேடு [ ]
பட்டதுயரேனினும் போதாதா கொடும்
பாவிகள் செய்ததும் சொற்பதீதா கத்தர்
கட்டிடாதிருப்பதென்னவாதா சித்தர்
காந்திசொல்மொழி செவிக்கேறாதா [ ]
சிறை தவச்சாலைஎன்ற தீரன் அங்கு
சென்றுமே தவம்புரிந்தவீரன் ஞான
மறைமொழிவழுத்துஞ் சிங்காரன் ஜெய
மாதவர் மகிழ்ந்திடுங்கெம்பீரன் [ ]
சங்கீதமும் பொங்கும் தஞ்சைவாசன் தமிழ்
சந்தமதை சாற்றும் துரைராஜன் குகன்
துங்கமிகும் தொண்டர்களின் நேசன்
சுதேச பக்திக்கே விசுவாசன் [ ]

---

8ம்பக்கத்தில் சாங்மிகுந்த என்பதைசாந்தமிகுந்த என்றும்
குறமதை என்பதை குற்றமதை என்றும் படிக்கவும்

அச்சிலிருக்கிறது. அச்சிலிருக்கிறது.

தமிழ்நாடெங்கினும் புகழ்பெற்றுள்ள முத்தமிழ்

வித்வ ஸ்ரீமான் வி. எஸ். பாப்புதாஸர்

அவர்களியற்றிய

# சிங்காரக் கேள்வி லாவணி

# இரண்டாம்பாகமும்

ஷையார் மாணவன் டி, கே, துரைராஜன்

இயற்றிய

# கலியுக வரத திருமுருகன்

# பக்திரஸ கீர்த்தனமும்

சீக்கிரம் வெளிவரும்,

எதிர்பாருங்கள் எதிர்பாருங்கள்

# தேசியக்கீதம் இரண்டாம் பாகம்

## அவசியம் பார்க்கவும்.

T, K, துரைராஜன்

---

ஸ்ரீ வைத்யவிலாசபிரஸ் தஞ்சை